# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ. எண்.16 நாள்:30.01.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் இன்று (30.01.2018) 2017ம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அலுவலர்கள் 18 பேர் கொண்ட குழுவிடம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துக்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான புவிசார் தகவல் அமைப்பு வரைபடம் தயாரிக்கும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஆளில்லா வானூர்தி (Drone)யின் செயல்பாடுகள் குறித்து விளக்கத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 426 ச.கி.மீ. பரப்பளவில் உள்ள பகுதிகளில் சொத்துக்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான புவிசார் அமைப்பு வரைபடம் தயாரிக்கும் பணியினை உலக வங்கி நிதியுதவி ரூ.6.44 கோடியில் செயல்படுத்த 21.11.2017 அன்று அடையாறு மண்டலம், இராஜா அண்ணாமலைபுரத்தில் துவக்கி வைத்தார்.

ஆளில்லா வானூர்தியை பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இயக்க அனுமதி மத்திய அரசின் வானூர்தி துறையின் தலைமை இயக்குநரகம் (DGCA), உள்துறை அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், புலனாய்வு துறை மற்றும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகர காவல்துறை ஆகியரோரிடம் தடையில்லா சான்றிதழ் பெற்று இதன் தொடர்ச்சியாக, சென்னை அகில இந்திய விமான நிலைய கட்டுப்பாட்டிடம் அனுமதி பெறப்பட்டு, நாள்தோறும் அவர்களுடைய மேற்பார்வையின் கீழ் பணிகள் நடைபெற்று 31.12.2017 வரை ஒரு ஆளில்லா வானூர்தியை பயன்படுத்தி 34.4 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு முடிவுற்றது. மேலும், பருவநிலையின் காரணமாக 8 நாட்கள் பணிகள் முழுமையாக நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டது.

இப்பணியினை விரைந்து முடிக்க அதிக எண்ணிக்கையிலான வானூர்திகளை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டு 17.01.2018 முதல் 29.01.2018 வரை 1 பெரிய ஆளில்லா விமானம் மற்றும் 4 சிறிய ஆளில்லா விமானம் உதவியுடன் 85.6 சதுர கிலோ மீட்டர் பணி நிறைவு பெற்றுள்ளது. இதுவரை 21.11.2017 முதல் 29.01.2018 வரை 120 சதுர கிலோ மீட்டர் பணி **(28%)** நிறைவு பெற்றுள்ளது.

மேலும் இப்பணியினை விரைந்து செயல்படுத்த மேலும், கூடுதலாக வானூர்தி இயக்க முடிவு செய்யப்பட்டு இதற்காக 7 சிறிய ஆளில்லா வானூர்தி மற்றும் 2 பெரிய ஆளில்லா வானூர்தி மூலம் 30.04.2018க்குள் பணி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர்கள மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடப்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**